செ.வெ.எண். 21 நாள் - 08.07.2020

நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) சார்பில் சிறுபான்மையினர் மக்களுக்காக தனி நபர் கடன் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கான சிறு தொழில் கடன் திட்டம், கல்விக் கடன் திட்டம், கறவை மாடு கடனுதவி, ஆட்டோ கடன் ஆகியவற்றிற்காக 2020-21ம் ஆண்டுக்கு ரூ.2.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

“நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) சார்பில் சிறுபான்மையினர் மக்களுக்காக தனி நபர் கடன் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கான சிறு தொழில் கடன் திட்டம், கல்விக் கடன் திட்டம், கறவை மாடு கடனுதவி, ஆட்டோ கடன் ஆகியவை வழங்கப்படுகின்றன. இதற்காக 2021-21ம் ஆண்டுக்கு ரூ.2.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்கடனுதவி திட்டம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலம் செயல்படுத்தப்படும்.

புதிய தொழில் தொடங்கவும், ஏற்கனவே செய்து வரும் தொழிலை விரிவாக்கம் செய்யவும் கடனுதவி பெற விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் அனைத்து விதத்திலும் முழுமையாக இருக்கும் பட்சத்திலும், கடன் அளிப்பதற்கான அனைத்து விதிமுறைகளையும் பூர்த்தி செய்யும் பட்சத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கடன் தொகை சம்பந்தப்பட்ட வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும். வங்கி மூலம் விண்ணப்பதாரருக்கு கடன் அளிக்கப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் 18 வயது பூர்த்தி அடைந்த, 60 வயதுக்கு மேற்படாத சிறுபான்மையினர் இக்கடன் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம், குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே கடனுதவி வழங்கப்படும்.

விண்ணப்பதாரார்கள், சாதிச்சான்று, ஆதார் கார்டு, வருமான சான்று, இருப்பிடச் சான்று, கடன் பெறும் தொழில் குறித்த விவரம்/திட்ட அறிக்கை, டிரைவிங் லைசென்ஸ் (போக்குவரத்து வாகனங்கள் கடன் பெறுபவர்கள் மட்டும்) மற்றும் வங்கிகள் கோரும் இதர ஆவணங்களை சமர்பிக்க வேண்டும். கல்விக் கடனுக்கு விண்ணப்பிக்கும் போது பள்ளி மாற்றுச் சான்றிதழ் மற்றும் உண்மைச் சான்றிதழ்களின் நகல்களையும் சமர்ப்பிக்க வேண்டும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்